**பெலிஅத்த பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 05 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பெலிஅத்த பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2010 சனவரி 19 ஆந் திகதிய PED/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின்படி 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்களினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 20 நிலையான வைப்பிற்குரிய மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 882,765 ஆக இருந்த போதிலும் நாட்குறிப்பு இலக்கம் 10 இல் அது ரூபா 837,667 ஆக சீராக்கப்பட்டமையின் காரணமாக வட்டி வருமானம் ரூபா 45,098 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 48,253 ஆக இருந்த போதிலும், பேரேட்டில் அது ரூபா 9,698 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக வருமானக் கடன்பட்டோர் ரூபா 38,555 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 2,953,766 தொகையொன்று புதிய அலுவலகக் கட்டிடத்தின் முன்பக்கமும் பின்பக்கமும் அலுவலகத்தை மீளமைப்புச் செய்தல் மூலதனமாக்கப்பட்டிருந்த போதிலும் பதிவேட்டின் படி ரூபா 2,679,567 தொகையொன்று மாத்திரம் செலவிடப்படடிருந்தது. அதன்படி அலுவலகக் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 274,199 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,042,586 கூட்டுத் தொகையான நிலையான சொத்துக்களின் கிரயம் உரிய சொத்துக் கணக்கில் வரவு

வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின்படி மீதி மற்றும் பட்டோலை/ உபயோகப் பதிவேடுகளுக்கிடையே ரூபா 8,408,349 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 7,947,550 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பதிவேடு, பட்டோலை, காலப்பகுப்பாய்வு தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,860,840 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,066,382 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| i. | வீதவரியும் வரியும் | 2,838 | 2,786 | 860 |
| ii. | வாடகை | 9,618 | 7,923 | 1,291 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 442 | 623 | - |
| iv. | ஏனைய வருமானம் | 55,240 | 31,269 | 90,402 |

### 2.2.2 ஆதனவரி

----------------

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதன வரி வருமானம் ரூபா 851,782 தொகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை.

### 2.2.3 பெலிஅத்த கடைத் தொகுதியின் கடை வாடகை

--------------------------------------------------------------------------------

2007 மே 30 ஆந் திகதிய கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் 11152 சதுர அடியான மூன்றாவது மாடி தனியார் கம்பனியொன்றுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(i) உடன்படிக்கையின்படி ரூபா 30 இலட்சம் ஒரே தடவையில் சேரும் பணம் 03 தவணைகளில் ஒர் ஆண்டினுள் (2008 யூன் 08 ஆந் திகதி வரையில்) செலுத்த வேண்டியமை உடன்படிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காலத்தில் பணத்தை செலுத்துவதற்கு வாடகையாளர் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 2011 சனவரி 06 ஆந் திகதி இறுதித் தவணையாக ரூபா 05 இலட்சம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்ட அறிக்கைகளின் தீர்மான இலக்கம் 518 இன் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த பிரகாரம் அந்த மாடியில் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததாகக் காண்பித்து 05 மாதங்கள் வாடகை 2012 ஒக்தோபர் முதல் எதிர்வரும் 05 மாதங்களுக்கு ஈடு செய்யப்பட்டு 2013 மார்ச் முதல் மீள அறவிடல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சபைக்குரிய ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போது வாடகை உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதி முதல் மாதாந்தம் வாடகை சபைக்கு அறவிட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக வாடகையாளரிடமிருந்து வாடகை அறவீடு இடைக்கிடையே அறவிடப்பட்டிருந்தது.

(iii) உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 சனவரி 01 ஆந் திகதிய தபபா/பபாகொ/ 2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின்படி ஒரே தடவையில் சேரும் பணம் ஒரே தடவையில் அறவிடப்படவேண்டியிருந்த போதிலும் ரூபா 15,000,790 தொகையான பணம் 48 கடைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.

(iv) மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின்படி வாடகை உடன்படிக்கை மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நிலுவை இயந்திர உபகரண வருமானம்

-------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் வெளித்தரப்பினர்களிடமிருந்தும் சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்றவர்களிடமிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 1,209,189 தொகையான நிலுவை இயந்திர உபகரண வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலுவையில் 2012 ஆம் ஆண்டிற்குரிய அறவிடவேண்டிய இயந்திர உபகரண வருமானம் ரூபா 1,053,959 ஆகும். அது மொத்த நிலுவையில் 87 சதவீதமாகும்.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 834,128 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 14,399,604 தொகையான முத்திரைக் கட்டணம் என்பன நிலுவையாகக் காணப்பட்டது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **முகாமைத்துவ செயற்திறனின்மை**

இலக்கம் RS – 1233 என்ற பேகோ இயந்திரத்திற்குரிய 01 அடி அளவான கொழுக்கி 2013 பெப்ரவரி மாதத்தின் 14 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் தொலைந்து போயிருந்தது. தொலைந்துபோன ஆதனத்தின் அண்ணளவான பெறுமதி ரூபா 104,227 தொகையை சமமான தவணைகளில் பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அறவிடுதல் பொருத்தமானது என 2013 யூன் 07 ஆந் திகதிய பரிசோதனை அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 34,742 தொகை அறவிடவேண்டியிருந்தது.

4. **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஊழியர் கடன் நிர்வாகம்